



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 1999ஆம் ஆண்டு மதுரையில் திறக்கப்பட்ட மதுரை முதல் மேயர் எஸ். முத்து அவர்களின் புதுப்பிக்கப்பட்ட சிலையை நேற்று முன்தினம் (31.5.2025) தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்து அவரது திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வின்போது, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ. பெரியசாமி, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர். பாலு, சட்டமன்ற உறுப்பினர்கள் காதர்பாட்சா முத்துராமலிங்கம், கோ. தளபதி, ஏ.வெங்கடேசன், எம். பூமிநாதன், மதுரை மாநகராட்சி மேயர் திருமதி இந்திராணி, மு. மணிமாறன், எஸ். முத்து அவர்களின் மகன்கள் முத்து நல்லதம்பி, கருணாநிதி முத்து மற்றும் குடும்பத்தினர். வெண்கல சிலை அமைப்புக் குழு தலைவர் மீ. முத்து மற்றும் நிருவாகிகள் உடனிருந்தனர்.

# மதுரையில் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் பிரமாண்ட ரோடுஷோ!

# 22 கி.மீட்டர் தூரம் மக்கள் அலைஅலையாய் திரண்டு உற்சாக வரவேற்பு!








### மதுரை மாவட்டம்,

## பந்தல்குடி வாய்க்கால்: முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆய்வு!

**மதுரை, ஜீன்.1-**

**பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக மதுரைக்கு வருகை தந்துள்ள முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (31.5.2025) மாலை, நடைபயணம் மேற்கொண்டு பெருந்திரளான பொதுமக்களின் வரவேற்பை ஏற்றுக்கொண்டு, மதுரை முதல் மேயர் எஸ். முத்து அவர்களின் புதுப்பிக்கப்பட்ட சிலையை திறந்து வைத்த பிறகு, சுற்றுலா மாளிகைக்கு செல்லும் வழியில் பந்தல்குடி வாய்க்காலை பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.**

கடந்த ஆண்டு மழை வெள்ளத்தின்போது, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பந்தல்குடி வாய்க்கால், பீ.பீ.குளம் வாய்க்கால், அனுப்பானடி வாய்க்கால் ஆகியவற்றில் 1 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, தூர் வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

நேற்று முன் தினம் (31.5.2025) பந்தல்குடி வாய்க்காலை ஆய்வு செய்து தூர் வாரும் பணிகளை மேற்கொள்ளவும், சுற்றுசுவர்களை கட்டும் பணிகளை மேற்கொள்ளவும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு அறிவுறுத்தினார்.

மாநகராட்சியின் சார்பில் தூர் வாரும் பணிகளுக்கு 23 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், நீர்வளத் துறையின் சார்பில் தடுப்புச்சுவர் கட்டுவதற்கு 63 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும் பணிகளை மேற்கொள்வதற்கு முன்மொழிவு அனுப்பப்பட்டுள்ளது என்பதை மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்தார்.

முதலமைச்சர் அவர்கள், விரைந்து அதற்கான அரசாணையை பெற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின்போது, வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் காதர்பாட்சா முத்துராமலிங்கம், கோ.தளபதி, மதுரை மாநகராட்சி மேயர் திருமதி இந்திராணி, மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி மா.சௌ.சங்கீதா, மாநகராட்சி ஆணையர் சித்ரா விஜயன் மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம், 01.06.2025 பிறந்தநாள் காணும் கழக தலைமை நிலையச் செயலாளரும், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் தலைவருமான பூச்சி எஸ். முருகன் நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.